அனாதி சிநேகத்தால் என்னை நேசித்தீரய்யா
காருண்யத்தினால் என்னை இழுத்துக்கொண்டீரே

உங்க அன்பு பெரியது, உங்க இரக்கம் பெரியது
உங்க கிருபை பெரியது, உங்க தயவு பெரியது

1. அனாதையாய் அலைந்த
என்னை தேடி வந்தீரே
அன்பு காட்டி அரவணைத்து
காத்துக்கொண்டீரே — உங்க அன்பு

2. தாயின் கருவில் தோன்றுமுன்னே
தெரிந்து கொண்டீரே
தாயைப் போல ஆற்றித்தேற்றி
அரவணைத்தீரே — உங்க அன்பு

3. நடத்தி வந்த பாதைகளை
நினைக்கும்போதெல்லாம்
கண்ணீரோடு நன்றி சொல்லி
துதிக்கிறேனையா — உங்க அன்பு

4. கர்த்தர் செய்ய நினைத்தது
தடைபடவில்லை
சகலத்தையும் நன்மைக்காக
செய்து முடித்தீரே — உங்க அன்பு